# மகரிஷி வித்யா மந்திர் மேனிலைப்பள்ளி ,
# சேத்துப்பட்டு , சென்னை - 31
# ஆயத்த தேர்வு-2020
## தமிழ்

01.02.2020

**கால அளவு :3 மணி நேரம்**

**பத்தாம் வகுப்பு** **மொத்த மதிப்பெண்கள் :80**

### பகுதி –அ ( படித்தல்- பொதுப்பகுதிகள் -15 மதிப்பெண்கள் )

**I. பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக** **( 5x1=5)**

இந்தியாவின் நடன வகைகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை என்றே சொல்ல வேண்டும். பல அம்சங்கள் அவற்றுள் பொதுவானவை என்று சொல்ல முடியாது. ஆனால் அவையனைத்தும் அடிப்படையில் சில பொதுத்தன்மைகள் உடையவை. பரத நாட்டியத்தில் வலிமைக்கும் அழகுக்கும் இடம் உண்டு. இசை,தாளநயம் ,கவிதை,அபிநயம் ,மரபு என்ற எல்லா அங்கங்களும் சீராக இணைவதால் பரதநாட்டியம் உலகில் பெரிதும் விரும்பப்படும் நடன வகைகளில் தனியிடம் பெற்றுத் திகழ்கிறது. குச்சிப்புடி நடனம் ஆந்திர மாநிலத்தில் உள்ள குச்சிப்புடி என்ற கிராமத்தில் தோன்றியதாகும்.புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட குச்சிப்புடி நடனம், கேரளாவின் கதகளியைப் போலவே நாட்டிய நாடக வகையைச் சேர்ந்தது. அதாவது, இந்த நாடக நடிகருக்குப் பாடவும்,பேசவும் தெரிந்திருக்கவேண்டும்.

கேரளப் பெண்களுக்கே உரிய நடனம் மோகினி ஆட்டம் என்பதாகும். கேரளா ஆண்களது கம்பீரமான கதகளி ஆட்டத்தில் பெண்களுக்கு இடமில்லை. அதேபோல, பெண்களது மோகினி ஆட்டத்தில் ஆண்களுக்கு இடமில்லை. அசுரர்களை மயக்குவதற்காக மகாவிஷ்ணு மோகினி வடிவம் எடுத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன . அவர் புனைந்த இந்த மோகினி வடிவமே நடனத்தின் பெயராக ஆயிற்று. கதக் நடனத்தில் தபலா, பக்கவாஜ், சிதார், சாரங்கி முதலான இசைக்கருவிகள் உபயோகிக்கப்படுகின்றன. ஒரு கதக் நடனத்தைப் பார்க்கும்போதும், இணைந்தொலிக்கும் இசைக்கருவிகளைக் கேட்கும் போதும், இந்து முஸ்லீம் பண்பாடுகளின் இந்திய நடன வகைகளில் கதக் நடனத்தில் மட்டுமே இவ்விரு சமயப் பண்பாடுகளும் வெற்றிகரமாக ஒன்றுபட்டுள்ளன.

**வினாக்கள்**

1. உலகில் பெரிதும் விரும்பப்படும் நடனம் ______
   அ. ஒடிஸ்ஸி ஆ. பரத நாட்டியம் இ. மோகினியாட்டம் ஈ. கதக்
2. குச்சிப்புடி நடனம் எந்த மாநிலத்தில் தோன்றியது ?
   அ. தமிழ்நாடு ஆ. மணிப்பூர் இ. ஆந்திரா ஈ. கேரளா
3. இந்து முஸ்லீம் பண்பாடுகளின் ஒருங்கிணைப்பை உணர்த்தும் நடனம்
   அ. பரதம் ஆ. ஒடிஸ்ஸி இ. கதக் ஈ. குச்சிப்புடி
4. கேரளத்தில் பெண்களுக்கே உரிய ஆட்டம் எது?
   அ. மோகினி ஆ. ஒடிஸ்ஸி இ. குச்சிபுடி ஈ. கதக்
5. கதக் நடனத்தில் இசைக்கப்படும் இசைக்கருவிகளுள் ஒன்று.
   அ. தபலா ஆ. வயலின் இ. மிருதங்கம் ஈ. நாதஸ்வரம்

**2.பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்டுள்ள பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக** **(5x1=5)**

மனித நாகரிகம் தொடங்கிய நாள் முதல் பூமியை வளப்படுத்துவதில் ஆறுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன . சிறிய உயிரினங்கள் தொடங்கி மனிதர்கள் வரை பலவற்றுக்கும் நதிகள்தான் உயிர்நாடி. அப்படி மலை, காடுகள் வழியாக உலகம் முழுக்கப் பயணப்படும் ஆறுகளில் முக்கியமான சிலவற்றைப் பார்க்கலாம் .

தென் அமெரிக்காவின் மொத்தப் பகுதியில் மூன்றில் ஒரு பங்கை ஊடுருவியபடி செல்லும் ஆறு, அமேசான். இது ஒன்பது நாடுகள் வழியாகப் பாய்கிறது. உலகின் மிகப்பெரிய ஆறு என்ற பெருமைக்குரியது. அதிகளவு மழைக்காடுகளைத் தன் வசம் வைத்திருக்கும் அமேசான் ஆறு, இந்த பூமியில் இருக்கக் கூடிய நன்னீரில் ஐந்தில் ஒருபங்கையும் தன் வசம் வைத்திருக்கிறது. இந்த அமேசான் நதிக்கரையில் உலகின் மிகப்பெரிய ஓங்கில்கள் வாழ்கின்றன. இந்த வகை ஓங்கில்கள் பருவமடைந்ததும், அவைகளுக்கு மீசை போன்ற அமைப்பு உருவாகிறது. இதனைக் கொண்டு தன்னுடைய இறை எங்கு இருக்கிறது என்பதைத் துல்லியமாகக் கண்டறிந்து அவற்றை வேட்டையாடும்.

வடகிழக்கு ஆப்பிரிக்காவில் பாய்கின்ற நதிதான் நைல். உலகின் இரண்டாவது பெரிய நதி. நைல் நதியை நம்பி பல உயிரினங்கள் உண்டு. அதில் மிகமுக்கியமானவை முதலைகள். ஆப்பிரிக்காவில் வாழ்கின்ற ஒட்டகங்கள் நைல் நதித் தண்ணீரைக் குடித்துவிட்டு மாதக்கணக்கில் பாலைவனங்களில் பயணங்களைத் தொடர்கின்றன.

**வினாக்கள்**

1. அமேசான் ஆறு எத்தனை நாடுகள் வழியாகப் பாய்கிறது ?
   அ. ஐந்து ஆ. ஏழு இ. ஒன்பது ஈ. மூன்று
2. பூமியை வளப்படுத்துவதில் __________முக்கியப் பங்கு வகிக்கின்றன .
   அ. கடல்கள் ஆ. மலைகள் இ. ஆறுகள் ஈ. பாலைவனங்கள்
3. அமேசான் ஆறு எந்த கண்டத்தில் பாய்கிறது ?
   அ. தென் அமெரிக்கா ஆ. வட அமெரிக்கா இ. ஐரோப்பா ஈ. ஆசியா
4. உலகின் இரண்டாவது பெரிய நதி எது ?
   அ. அமேசான் ஆ. நைல் இ. கங்கை ஈ. பிரம்மபுத்ரா
5. ஆப்பிரிக்காவில் வாழும் உயிரினம் யாது ?
   அ. ஒட்டகம் ஆ. புலி இ. ஓங்கில் ஈ. திமிங்கலம்

**3. பின்வரும் பகுதியைப் படித்து, அதனை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக:_** **(1x5=5)**

. "யானைக்கும் அடி சறுக்கும்" என்ற பழமொழி பழையது ; 'யானைக்கும் நீரிழிவு நோய் வரும்' என்பதுதான் புதியது. காட்டு விலங்குகளில் நம்மைப் பிரமிக்க வைக்கிற யானைக்கும் உடற்பருமன், நீரிழிவு , மாரடைப்பு போன்ற நோய்கள் வர ஆரம்பித்திருப்பதால் , காட்டுயிர் மருத்துவ உலகம் மிகவும் கவலை கொண்டிருக்கிறது. குறிப்பாக, நம் ஊரில் கோயில் யானைகளுக்குப் பொங்கலும் பழமும் கொடுத்துக் கொடுத்து அவற்றை நீரிழிவுக்குள் சிக்க வைத்து விட்டோம்.

விலங்குக் காட்சிச் சாலையில் உள்ள யானைகள் அதிகம் நடக்காமல் , நமக்கு காட்சிபடுத்தப்படும் பொருளாகிப் போனதாலும் அதற்கும் நீரிழிவு நோய் வர ஆரம்பித்துவிட்டது . சமீபத்தில் நடைபெற்ற ஆய்வுகளில்,

யானையில் ‘லெப்டின் ஹார்மோன் ‘, அது சுரக்கும் இன்சுலின் அளவு, போன்றவற்றைக் கணக்கிட்டு , ‘ கொஞ்சம் யானையை நடக்க விடுங்கப்பா ‘ எனக் கால்நடை மருத்துவர்களின் குரல் சத்தமாக ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது .

தன் இரைக்காக சாதாரணமாக 7 கி.மீ முதல் 15 கி.மீ . வரை தினசரி நடந்த யானை கோவில் வாசலிலும் வனவிலங்குக் காட்சிசாலையிலும் நிற்க வைக்கப்பட்டதால் அதற்குத் தொப்பையும் சர்க்கரையும் தொற்றிக்கொண்டது . அதே சிக்கல் தான் மனிதனுக்கும். மனிதனோ யானையோ காட்டில் இருந்தாலும் சரி, நாட்டில் இருந்தாலும் சரி , நடந்தாக வேண்டும். சர்க்கரை வியாதி ஒரு நோய் அன்று. அஃது ஒரு குறைபாடு . சரியான உணவுப் பழக்கம், உடற்பயிற்சி முதலியவற்றால் இக்குறைபாட்டை நம்மால் கட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியும் . இந்தியா நோயற்ற இந்தியாவாக இருந்தால்தான் வலிமையான இந்தியாவாகஇருக்கமுடியும்.

**பகுதி –ஆ [எழுதுதல்- 14 மதிப்பெண்கள் ]**

4. அ] நீ வாழும் பகுதியில் தெரு விளக்கு வசதி அமைத்துத் தருமாறு மின் வாரியச் செயற்பொறியாளர் அவர்களுக்கு கடிதம் வரைக. **[1x6=6]**

[அல்லது]

ஆ ] உன் பள்ளியில் நடைபெற்ற பள்ளி ஆண்டு விழா குறித்து அயலூர் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

[ இரண்டு கடிதங்களிலும் உன் முகவரி, ந . கதிரவன் / ச. பூங்குழலி ,
50- பாரதியார் தெரு , அண்ணாநகர் மேற்கு , சென்னை - 40 எனக்
கொள்க]

**5. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக _** **(1x8=8)**

1. முன்னுரை – எரி சக்தியும் நாடு வளர்ச்சியும் – மின்சாரம் முதலான எரிசக்திகள் – மரபு சார்ந்தவை - மரபு சாராதவை - இயற்கை ஆற்றலை பயன்படுத்துவோம் - மாசு குறைப்போம் – முடிவுரை.

2. முன்னுரை – காந்தியின் பிறப்பு - தென்னாப்பிரிக்கா வாழ்வின் அனுபவங்கள் - இந்தியர்களுக்காகத் தொண்டாற்றுதல் - ஒத்துழையாமை இயக்கம் - முடிவுரை .

3. முன்னுரை - பழங்கால பெண்களின் நிலை – பெண் கல்வி - பெண்களின் முன்னேற்றம் - இன்றைய சாதனைப் பெண்கள் – முடிவுரை .

**பகுதி –இ (இலக்கணம் -15 மதிப்பெண்கள் )**

**6. சான்று தருக (எவையேனும் மூன்றனுக்கு மட்டும் )** **[3x1=3]**

1. செய்யுளிசை அளபெடை
 அ.உரனசைஇ ஆ. கெடுப்பதூஉம் இ. படாஅ ஈ. உடுப்பதூஉம்
2. இருபெயரொட்டுப் பண்புத்தொகை
 அ. செம்மலர் ஆ. முல்லை மலர் இ. வட்டநிலா ஈ. முத்துப்பல்

3. பொதுமொழி

அ. படித்தான் ஆ. சுவைத்தேன் இ. சுவையான தேன் ஈ. எட்டு

4. வினைமுற்றுத் தொடர்

அ. சென்ற கோதை ஆ. நல்ல மாணவன் இ. படித்தான் பாரி

ஈ. கண்ணா வா

5. தேமாங்காய்

அ. எழுத்தெல்லாம் ஆ. யாதானும் இ. வாழியவே ஈ. வந்தவன்

**7. நிரப்புக ( எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) [3x1=3]**

1. இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் ______ எனப்படும்

அ. வழுநிலை ஆ. வழாநிலை இ. கால வழாநிலை ஈ. விடை வழாநிலை

2. நெய்தல் நிலம் என்பது ________

அ. வயலும் வயல் சார்ந்த இடமும் ஆ. மலையும் மலை சார்ந்த இடமும்

இ. கடலும் கடல் சார்ந்த இடமும் ஈ. காடும் காடு சார்ந்த இடமும்

3 . வினா _____ வகைப்படும்

அ. ஆறு ஆ. ஏழு இ. எட்டு ஈ. ஐந்து

4. வெட்சி நிரை கவர்தல் என்பதில் உள்ள நிரை என்பதன் பொருள் ____

அ. பசு ஆ. பசுக்கூட்டம் இ. கூட்டம் ஈ. வரிசை

5. ஓர் ஆண்டின் கூறுகள் ______ எனப்படும் .

அ. மாதம் ஆ. பெரும்பொழுது இ. சிறு பொழுது ஈ. பருவம்

**8. கூறியவாறு செய்க (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) [3x1=3]**

1. மயில் கத்தும் ( மரபு வழாநிலை ஆக்குக)

அ. மயில் கத்தும் ஆ. மயில் அகவும் இ. மயில் கொக்கரிக்கும் ஈ. மயில் கூனுகும்

2. மணற்கேணி ( அசை பிரித்து வாய்ப்பாடு கூறு)

அ. நிரை நேர் நேர் – புளிமாங்காய் ஆ. நேர் நேர் நேர் – தேமாங்காய்

இ. நிரை நிரை நேர் – கருவிளங்காய் ஈ. நேர் நிரை நேர் – கூவிளங்காய்

3. மருதம் ( சரியான தொழில் பொருத்துக )

அ. ஏறு தழுவுதல் ஆ. களை எடுத்தல் இ. கிழங்கு அகழ்தல்

ஈ. வழிப்பறி செய்தல்

4. ஆடுதல் (தொழிற்பெயர் விகுதியை எழுதுக )

அ. அல் ஆ. தல் இ. ல் ஈ. ஆடல்

5. வேந்தர் (அளவுப் பண்புத்தொகை )

அ. வால்வேந்தர் ஆ. பெருவேந்தர் இ. மூவேந்தர் ஈ. சிற்றரசர்

**9.இலக்கணக் குறிப்பு எழுதுக (எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ) [3x1=3]**

1. மாமழை

அ. இடைச்சொல் தொடர் ஆ. இடைத் தொடர்

இ. உரிச்சொல் தொடர் ஈ. எழுவாய்த் தொடர்

2 . ஒரு விரல் காட்டி பெரிதோ சிறிதோ என்பது

அ. பால் வழு ஆ. திணை வழு இ. காலவழு ஈ. வினாவழு

3. பேறு

அ. முதனிலைத் தொழிற்பெயர் ஆ. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

இ. விகுதிபெற்ற தொழிற்பெயர் ஈ. பகுதி

4. நான் வந்தான்

அ. திணை வழு ஆ. இட வழு இ. பால் வழு ஈ. கால வழு

5. எஃஃகிலங்கிய

அ. ஆய்தம் ஆ. ஒற்றளபெடை இ. உயிரளபெடை ஈ. ஆய்தக்குறுக்கம்

**10. சரியான தொடரைத் தேர்வு செய்க (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) [3x1=3]**

1. அ. பசுவை என்னம்மை வந்தாள் என்பது திணை வழு
   ஆ. பசுவை என்னம்மை வந்தாள் என்பது பால் வழு
   இ. பசுவை என்னம்மை வந்தாள் என்பது பால்வழுவமைதி
   ஈ. பசுவை என்னம்மை வந்தாள் என்பது திணை வழுவமைதி
2. அ. இயல்பான நிகழ்வில் கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக்கூறுவது இயல்பு நவிற்சி அணி
   ஆ. இயல்பான நிகழ்வில் கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக்கூறுவது தற்குறிப்பேற்ற அணி
   இ. இயல்பான நிகழ்வில் கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக்கூறுவது நிரல்நிறை அணி
   ஈ. இயல்பான நிகழ்வில் கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக்கூறுவது தீவக அணி
3. அ. எயில் காத்தல் கரந்தை
   ஆ. எயில் காத்தல் உழிஞை
   இ. எயில் காத்தல் தும்பை
   ஈ. எயில் காத்தல் நொச்சி
4. அ. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது வெண்பா
   ஆ. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது ஆசிரியப்பா
   இ. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது வஞ்சிப்பா
   ஈ. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது கலிப்பா.
5. அ. நேர் நேர் நேர் – புளிமாங்காய்
   ஆ. நேர் நேர் நேர் – தேமாங்காய்
   இ. நேர் நேர் நேர் – கருவிளங்காய்
   ஈ. . நேர் நேர் நேர் – கூவிளங்காய்

**பகுதி-ஈ [இலக்கியம் / தமிழ்ப் பாடநூல்-36 மதிப்பெண்கள்]**

**11. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து அதன் அடியிற் காணும் வினாக்களுக்கு விடை தருக. [5x1=5]**

18 ஆம் நூற்றாண்டுவரை வடமொழி நூல்கள் பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. ஆங்கிலேயர் வருகைக்குப் பின் ஆங்கில நூல்களும் ஆங்கிலம் வழியாகப் பிற ஐரோப்பிய மொழி நூல்களும் அறிமுகமாயின. இவற்றில் தரமான நூல்கள் என்று பார்த்தால் சிலதான் எஞ்சும். இதே போலத் தமிழ் நூல்களும் பிற மொழிகளுக்கு அறிமுகமாயின. தமிழுக்குரிய நூலாக இருந்த திருக்குறள் உலக மொழிகளுக்குரியதாக மாறியது மொழிபெயர்ப்பால்தான்.

மொழிபெயர்ப்பு இல்லாவிடில் சில படைப்பாளிகளும் கூட உருவாகியிருக்க முடியாது. ஷேக்ஸ்பியர் இருந்திருக்க முடியாது. கம்பன் இருந்திருக்க முடியாது. இரவீந்திரநாத தாகூர் வங்க மொழியில் எழுதிய

கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் அவரே மொழிபெயர்த்த பிறகுதான் அவருக்கு நோபல்பரிசு கிடைத்தது. மகாகவியான பாரதியின் கவிதைகளும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் உலக அளவில் உயரிய விருதுகளும் ஏற்பும் கிடைத்திருக்கும் . ஒரு நாடு எவ்வளவு மின்னாற்றலைப் பயன்படுத்துகிறது என்பதைக் கொண்டு அதன் தொழில் வளர்ச்சியை மதிப்பிடுவார்கள் . அதேபோல, ஒரு நாட்டின் மொழிபெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கையைக் கொண்டு அந்நாட்டின் பண்பாட்டையும் அறிவையும் மதிப்பிடுவார்கள்.

நேரடி மொழிபெயர்ப்பாக பிரெஞ்சு, ஜெர்மன் , ஆப்பிரிக்கா, லத்தின், அமெரிக்கா முதலான நாடுகளின் நூல்கள் இன்று கிடைக்கத் தொடங்கி இருப்பது, நல்ல பயனை அளிக்கும் என எதிர்பார்க்கலாம்.

மொழிபெயர்ப்பின் மூலம் இலக்கியத் திறனாய்வுக் கொள்கையையும் பெற்றிருக்கிறோம். இன்றுள்ள புதிய திறனாய்வு முறைகளை எல்லாம் நாம் ஆங்கிலத்தின் வழியாகவே பெற்றிருக்கிறோம் .

பிறமொழி இலக்கியங்கள், இலக்கிய வடிவங்கள் பலவும் தமிழுக்கு அறிமுகமாகி அது போன்ற முயற்சிகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. மொழிபெயர்க்கப்பட்ட நூல்களைத் தமிழ் இலக்கியங்களோடு ஒப்பு நோக்கி சிந்தனை, வடிவம், உத்தி, மையக்கரு, பண்பாடு போன்ற பலவகைக் கூறுகளை எடைபோடவும் வளர்க்கவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது.

**வினாக்கள் :**

1. தமிழுக்குரிய நூலாக இருந்து உலக மொழிகளுக்குரியதாக மாறிய நூல் எது?
2. ஒரு நாட்டின் மொழிபெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கை கொண்டு எதை மதிப்பிடுவார்கள் ?
3. இரவீந்திரநாத் தாகூர் எழுதிய கீதாஞ்சலி எந்த மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது ?
4. மொழிபெயர்ப்பு எந்த கொள்கையைப் பெற்றிருக்கிறது ?
5. நேரடி மொழிபெயர்ப்பின் மூலமாக எந்த நாட்டு நூல்கள் இன்று நமக்குக் கிடைக்கின்றன ?

12. **பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்து அதன் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி :** **[4x1=4]**

"ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ
வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில் ஆளோ?
தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ ?
"ஏழைமை வேடன் இறந்திலன் " என்று எனை ஏசாரோ ?"

**வினாக்கள்:**

1. இச்செய்யுள் இடம் பெற்ற நூல் எது?
அ. பெரியபுராணம் ஆ. கம்பராமாயணம் இ. பெருமாள் திருமொழி ஈ. திருவருட்பா
2. இச்செய்யுளைப் பாடியவர் யார்?
அ. குலசேகர ஆழ்வார் ஆ. இளங்கோவடிகள் இ. கம்பர் ஈ. நக்கீரர்
3. " ஏழைமை வேடன் " என குறிப்பிடப்படுபவன் யார்?
அ. ராமன் ஆ. இலக்குவன் இ. குகன் ஈ. அனுமன்
4. " நெடுந்திரை ஆறு" என குறிப்பிடப்படும் ஆறு எது?
அ. யமுனை ஆ. காவிரி இ. கங்கை ஈ. தாமிரபரணி

13. பின்வரும் குறட்பாக்களைச் சரியான சீர்களால் நிரப்புக [4x1/2=2]

1. முயற்சி திருவினை ________ முயற்றின்மை
________ புகுத்தி விடும்.

2. பொருளல் லவரைப் பொருளாகச் ________
பொருளல்ல தில்லை ________ .

14. எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடையளி : [2x4=8]

1. இடைக்காடனார் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி உரைத்தன யாவை ?

2. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

3. இராசராசன் காட்டும் திருநாட்டின் இயல்புகள் யாவை?

4. காலக் கணிதம் பாடல்வழி கவியரசு உரைத்தவற்றை விவரி .

15. எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடையளி : [2x5=10]

1. தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.

2. மொழிபெயர்ப்பின் தொடக்க காலம் குறித்து விவரி .

3. தப்பு ஆட்டம் - குறித்து எழுதுக.

4. ம.பொ. சி. அவர்கள் ஆறுமாதம் கடுங்காவல் தண்டனைப் பெற்றதற்குக் காரணம் என்ன?

5. தமிழரின் அரசியல் அறம் குறித்து திறனாய்வு செய்க.

16. ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக. [1x7=7]

1. புயலிலே ஒரு தோணி - கதைச்சுருக்கம்

2. "விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை "

3. ஒருவன் இருக்கிறான் .

************